எதிர்கால வெற்றிகள் மற்றும் சாதனைகளை அடைவதற்கும், தொடக்கக் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது.

இதனைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தரமான தொடக்கக் கல்வியை வழங்குவதற்கு, புதுமையான கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்தி வருகிறது. புதிய தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு மக்கள்தொகை 300 ஆக இருக்க வேண்டும்; பள்ளிகளில் குறைந்தபட்ச மாணாக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை 20 ஆக அமைய வேண்டும்; ஒரு கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் அங்கீகாரம் பெறாத தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் ஏதும் இருக்கக் கூடாது; பள்ளி மாணவ, மாணவிகளுக்குப் போதுமான இட வசதி, கட்டட வசதி, விளையாட வசதி போன்றவற்றை சமுதாயப் பங்காகப் பொது மக்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். இவற்றையெல்லாம் பூர்த்தி செய்யும்பட்சத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தத் தொடக்கப் பள்ளியைத் தொடங்குவதற்கு ஆவன செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 344, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

344—

வனச் சாலை சீரமைத்தல்

***52772—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, திண்டுக்கல்—கரூர்—கரட்டூர் வனச் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள திண்டுக்கல்—கரூர் சாலை முதல் கரட்டூர் வரையுள்ள வனத் துறையால் மேம்படுத்தப்பட்ட தார்ச் சாலையைச் சீரமைக்க, துறையின்மூலம் ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்திய வரைபடத்தில் கீழேயுள்ள தமிழகத்தை, இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றிட, அல்லும், பகலும் அயராது உழைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திண்டுக்கல் கரூர் சாலை முதல் கரட்டூர் வரையுள்ள சாலை தார்ச் சாலை என்று குறிப்பிட்டார்கள். அது தார்ச் சாலையாக இல்லை; மண் சாலையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தச் சாலையை இரண்டு அடுக்கு ஜல்லி பரப்பி, தார்ச் சாலையாக மாற்றித் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. அங்கு 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மக்கள் விவசாய விளைநிலங்களுக்கு அந்த வழியாகச் சென்று வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் கொண்டு, அந்தச் சாலையை தார்ச் சாலையாக உடனடியாக மாற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலையானது, வனப் பகுதிக்கு வெளியே அமைந்துள்ள திண்டுக்கல்–கரூர் பிரதான சாலையிலிருந்து கரட்டூர் வழியாக தொப்புசாமி மலை காப்புக் காட்டில், வனப் பகுதியின் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு, 1921 ஆம் ஆண்டில் வனத் துறையால் 8.16 கிலோ மீட்டர் நீளமும், 7.30 மீட்டர் அகலமும் கொண்ட சாலையாக அமைக்கப்பட்டது. இதற்குப் பின்பு, இந்தச் சாலை தார்ச் சாலையாக மேம்படுத்தப்பட்டது. இந்தச் சாலையானது வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரட்டூர், ஆர். கோம்பை, கரையானூர், மாமரத்துச்சாலை, ரெட்டியாப்பட்டி, தாதனூர் ஆகிய கிராமங்கள் வழியாகச் சென்று தொப்புசாமி மலை காப்புக் காட்டின் எல்லையில் முடிவடைகிறது. இந்தச் சாலையை இந்தப் பகுதியில் வாழும் சுமார் 7,000-க்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இச்சாலையை மேம்படுத்தி, பாலங்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்குத் தோராயமாக 3 கோடி ரூபாய் தேவைப்படும். இந்தச் சாலையைத் தற்போதுள்ள நீள, அகலத்திற்கு மிகாமல் மேம்பாடு செய்ய, நிதி ஆதாரத்தின் அடிப்படையில் வனத் துறைமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் அல்லது பிற துறைகளின் மூலமாக நிதி உதவியுடன் கருத்துரு கிடைக்கப்பெறும்பட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையும், நான் குறிப்பிடுகின்ற சாலையும் வேறுபடுகின்றது. நான் குறிப்பிடுகின்ற சாலை 3 கிலோ மீட்டர் நீளம் மட்டுமே கொண்டது. மண் சாலையாக இருக்கின்றது. இதுவரை அந்தச் சாலை சீரமைக்கப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடிய சாலை ஆர். கோம்பை வழியாக தொப்பூர்

காட்டுப் பகுதிக்குச் செல்லக்கூடிய சாலையாகும். நான் குறிப்பிடுகின்ற சாலை 3 கிலோ மீட்டர் நீளம் மட்டுமே கொண்டது. ஆகவே, தயைகூர்ந்து அந்தச் சாலையைத் தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலையை துறையின் மூலமாக ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், நம்மையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் மலைவாழ் மக்கள் வாழும் பகுதியான ஏரிக்காடு முதல் குண்டூர் வரையுள்ள சாலையானது வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள சாலையாகும். அந்தச் சாலையை மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளதால், அதைச் சரிசெய்ய நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும் எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சாலை குறித்து மாவட்ட வனத் துறை அதிகாரிகளின் மூலமாக முறைப்படி விண்ணப்பம் அனுப்பி வைத்தால், உடனடியாக வனத் துறைமூலம் பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தச் சாலையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, சித்தேரி மலை, வாச்சாத்தி அடிவாரத்திலிருந்து கலசப்பாடி வரையிலும், சித்தேரியிலிருந்து மண்ணூர் வரையிலும் சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களும் இதை முன்மொழிந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேரில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. அந்த மலையின் மேம்பாட்டிற்காக 41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில், இந்த ஆண்டிலாவது அந்த இரண்டு சாலைகளையும் தார்ச் சாலைகளாக அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

அதேபோல், வெள்ளிமலையில் பல பகுதிகளில் ஜல்லி கொட்டி, தார் போடுவதற்குத் தயாராக வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில், தார் போட்டு, அந்தச் சாலையை மக்கள் பயன்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நீலகிரி மலையில் இருக்கக்கூடிய தோடர் இன மக்களுக்கு ஏறக்குறைய, . . .

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, (குறுக்கீடு) நீங்கள் வேடசந்தூர் தொகுதியைப் பற்றிய கேள்வியைத்தான் கேட்க வேண்டும். நீங்கள் கேட்டீர்கள்

என்பதால், துணைக் கேள்வி கேட்க நான் அனுமதி அளித்தேன். நீங்கள் ஒரே கேள்வியில் ஐந்து மலைகளைப் பற்றி துணைக் கேள்வி கேட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எப்படிப் பதில் இருக்கும்?

திரு. ப. டில்லி பாபு: ஒரு நிமிடத்தில் நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏதாவது ஒரு கேள்வியை மட்டும் கேட்டுவிட்டு உட்காருங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையில் இருக்கக்கூடிய தோடர் இன மக்களுக்குச் சொந்தமான 2,971 ஏக்கர் நிலங்களை ஏறக்குறைய 20, 30 ஆண்டுகளாக வனத் துறை வைத்திருப்பதை, அந்த மக்களிடமே ஒப்படைக்க மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை ஏற்கெனவே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்மூலம் முறையாக அணுகப்பட்டு, அனைத்தும் செயல்படுத்தப்பட்டு, விரைவில் அந்தச் சாலை அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், 1980 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து, தற்போது வரை பொதுமக்கள் பயன்பாட்டில் வனப் பகுதியிலுள்ள அந்தச் சாலைகளின் வழித் தடங்களில் அதே பரப்பளவில் மேம்படுத்த, மாவட்ட வன அலுவலர் அவர்களிடம் முறையாக விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தால், அதனை மத்திய அரசிற்கு அனுப்பி, அவர்களின் அனுமதியைப் பெற்று, அந்தச் சாலைகளை மேம்படுத்துவதற்குண்டான உரிய நடவடிக்கைகள் துறையின்மூலம் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். எனது மேட்டுப்பாளையம் தொகுதி மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியிருக்கிற பகுதியாகும். மேட்டுப்பாளையத்திலிருந்து மேற்கு தொடர்ச்சி மலையின் மையப் பகுதியில் அமைந்திருக்கின்ற பில்லூர் அணைக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், ஏறத்தாழ 60 கிலோ மீட்டர் தூரம் பயணித்துத்தான் செல்ல வேண்டும். அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏறத்தாழ ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆதிவாசி குடியிருப்புகளும், குக்கிராமங்களும் உள்ளன. தற்போது மேட்டுப்பாளையத்திலிருந்து செல்லும் அந்தச் சாலை சுமார் 50 கிலோ மீட்டர் வரை பழுதடைந்த சாலையாக இருக்கின்றது. மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூர் அணைக்கட்டு வரை, 14 கிலோ மீட்டர் நீளம் கொண்ட ஒரு மாற்றுச் சாலை இருக்கின்றது. அந்தச் சாலையைப் போடுவதற்கு அரசு முயற்சி எடுத்து, 14 கிலோ மீட்டர் கொண்ட அந்தச் சாலையில், தற்போது 5 கிலோ மீட்டர் வரை சாலை போடப்பட்டிருக்கின்றது. மீதமுள்ள 9 கிலோ மீட்டர் சாலை வனத் துறையில் இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையின் அனுமதியைப் பெறாத ஒரு சூழல் இருக்கின்றது. ஆகவே, சாலையைப் போடுவதற்கு வனத் துறையிடமிருந்து அனுமதியை வெகு விரைவில் பெற்றுத் தருவார்களேயானால், அந்த 14 கிலோ மீட்டர் சாலையைப் பயன்படுத்தி பில்லூர் அணைக்குச் சென்று விடலாம். அங்கிருந்து குக்கிராமங்களுக்கும் செல்ல அது ஏதுவாக இருக்கும். ஆகவே, 60 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டிய சாலையைத் தவிர்க்கும்வகையில் இந்த 14 கிலோ மீட்டர் மாற்றுச் சாலையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற சாலை, துறையின் ஆய்வில் இருக்கின்றது. ஆகவே, விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களின் அனுமதியைப் பெற்று, அதற்குரிய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 345, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

345—

மாசுபடுதல்

***23930 திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, சாமியம்பாளையத்தில் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளால் ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய புனித பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி, கத்தேரி ஊராட்சி, சாமியம்பாளையத்தில், குடிநீரில் சாயப் பட்டறைக் கழிவுகள் கலக்காதவாறு மறுசுழற்சி செய்து, தொழிற்சாலையின் உற்பத்தித் தேவைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரிடம் அறிவு உண்டு, பேரறிஞர் அண்ணாவிடம் ஆற்றல் உண்டு, புரட்சித் தலைவரிடம் வாரி வழங்கும் வள்ளல் குணம் உண்டு. மாண்புமிகு புரட்சித்*